**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KATPADI, VELLORE DISTRICT.**

**C.C.NO.85/2021**

**DEPOSITION OF WITNESS P.W.1**

| | | |
|---|---|---|
| NAME | : | DINESH |
| FATHER/HUSBAND'S NAME | : | LOGANATHAN |
| VILLAGE | : | PERNAMPET |
| OCCUPATION | : | SHOP |
| AGE | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35, 36 of Criminal rules of practice 2019.

**08.05.2023.**

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பேர்ணாம்பட்டில் கடை வைத்துள்ளேன். நான் இதற்கு முன்னர் 2018 ஆம் வருடம் சிஸ்கோ செக்கியூரிட்டி சர்விசில் கிளை பொருப்பாளராக பணியாற்றினேன். மேற்படி நிறுவனத்தில் எனது அன்றாட பணியானது எ.டி.எம். இயந்திரத்தில் பணம் நிரப்புவது ஆகும். வழக்கின் எதிரியான பிரேம்குமார் எ.டி.எம். இயந்திரங்களில் பணம் நிரப்பும் பணியிலிருந்தார். அவரை நான் மேற்பார்வை செய்து வந்தேன்.

கடந்த 07.02.2018 அன்று வள்ளிமலையில் உள்ள எஸ்.பி.ஐ. எ.டி.எம்.ல் பணம் நிரப்பவும் அதனை தணிக்கை செய்யவும் குழு சென்றபோது பரிவர்த்தனை பணத்தில் ரூ.7 லட்சம் குறைவாக இருந்ததென தெரியவந்தது. அதுபோலவே, வி.ஐ.டி. கல்லூரி வளாகத்தில் உள்ள எஸ்.பி.ஐ. எ.டி.எம்.ல் தணிக்கை செய்தபோது அதிலும் ரூ.7 லட்சம் குறைவாக இருந்ததென தெரியவந்தது. இது சம்பந்தமாக மேற்படி தணிக்கை குழு என்னிடம் தகவல் தெரிவித்தார்கள். பின்பு இது சம்பந்தமாக நான் எனது நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் காட்பாடி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன்.

அவர்கள் விசாரணையின்போது மேற்படி எ.டி.எம். வளாகத்தில் உள்ள கண்காணிப்பு காமிராக்களை ஆராய்ந்து பார்த்தபோது முதல் எதிரி பிரேம்குமாருடன் அவரது மைத்துனரான 2 வது எதிரி சரத்குமார் என்பவர் பணம் நிரப்பும்போது அவருடன் இருந்த விவரம் தெரியவந்தது. மேற்படி 2 வது எதிரி சரத்குமார் எங்கள் நிறுவனத்தில்

எந்த பணியிலும் இல்லை. எனவே போலிசார் அவர்களை கைது செய்து விசாரணை செய்து அவர்களிடமிருந்து ரூ.10,28,500/— யை பறிமுதல் செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக காட்பாடி போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH
Digitally signed by J JAYGANESH
Date: 2023.05.08 16:42:23 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.